**புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2020**

---

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 101104 எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடனபடிக்கைகளின் பிரகாரம், மின்வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. எரிசக்தி மின்சார விநியோக அமைப்பு உறிச்சல் இயலளவை அதிகரித்து சராசரி உற்பத்திக் கிரயங்களை குறைப்பதன் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதலே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய, றாகல போன்ற இடங்களில் 132/33 கேவி உப நிலைய கட்ட நிர்மாணம் என்ற பெயரில் நான்கு கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான யூரோ 41.10 மில்லியன் தொகையானதுடன் அதில் வேலைகளிற்கான உபகரணங்களை வழங்குவதற்கான ஒப்பந்தங்களின் நிதியளிப்பு பகுதிகளை பயன்படுத்தி பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான யூரோ 30 மில்லியன் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 1,794.20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன்தாழில்நுட்ப ரீதியாக 2019 ஒக்தோபர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தோகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 71,855,666 பெறுமதியுடைய ஐந்து வாகனங்கள் பின்னர் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்கள் செயற்திட்டம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களின் பெறுமதி நடைமுறையல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்ப்டிருக்கவில்லை. | 71,855,666 | இலங்கை மின்னசார சபையின் பெயரில் சொத்துக்களின் உரிமையாண்மையை மாற்றப்படும் வரை நடைபெறும் வேலையின் கீழ் சொத்துக்களை வைத்திருப்பதே செயற்திட்டப் பிரிவின் தற்பொதைய நடைமுயையாக உள்ளது. இலங்கை மின்னசார சபையின் பெயரிலுள்ள சகல சொத்துக்களும் பிரிவிற்குள் மத்தியமயப்படுத்தப்பட்ட சொத்து தரவு அடிப்படையில் பேணும் நோக்கில் AGM- செயற்திட்டங்கள் கிரய குறியீட்டு நிலையத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்திட்ட சொத்துக்களாக காட்டப்பட வெண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட எட்டு வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் தனியாக காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால் நடைபெறும் வேலைகளின் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | - | இலங்கை மின்னசார சபையின் பெயரில் சொத்துக்களின் உரிமையாண்மையை மாற்றப்படும் வரை நடைபெறும் வேலையின் கீழ் சொத்துக்களை வைத்திருப்பதே செயற்திட்டப் பிரிவின் தற்போதைய நடைமுயையாக உள்ளது. இலங்கை மின்னசார சபையின் பெயரிலுள்ள சகல சொத்துக்களும் பிரிவிற்குள் மத்தியமயப்படுத்தப்பட்ட சொத்து தரவு அடிப்படையில் பேணும் நோக்கில் | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்திட்ட சொத்துக்களாக காட்டப்பட வெண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | AGM- செயற்திட்டங்கள் கிரய குறியீட்டு நிலையத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | |
| (இ) | ரூபா 79,442,841 ஆன தேறிய நாணயமாற்று இலாபம் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லாச் பொறுப்புக்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நடைபெறும் வேலைகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் நடைபெறும் வேலைகளின் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 79,442,841 | கடுத்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டு நடைமுறை பிரயோகிக்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந் திகதிய SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கை | மீளாய்வு காலத்தின் போது செயற்திட்டமானது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்காமல் தனது சொந்த நிதியிலிருந்து ரூபா 538,202 ஆன உழைக்கும் போது செலுத்தும் வரி/ தனிநபர் வருமான வரியை (APIT) செலுத்தியிருந்தது. | உழைக்கும் போது செலுத்தும் வரிக்கான பொறுப்பு அதன் ஊழியர்கள் செய்யப்பட வேண்டியிருந்தும் இலங்கை மின்சார சபை ஊழியர்களின் உழைக்கும் போது செலுத்தும் வரிப் பொறுப்பை இலங்கை மின்சார சபையால் செய்யப்பட்டிருந்தது. இது மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சிற்கும் சம்பளங்கள் மற்றும் ஆளணிக் குழுவிற்கும் அறிவிக்கப் பட்டிருந்ததுடன் பல சந்தர்ப்பங்களில் | சபையால் ஊழியர்களின் சம்பங்களிலிருந்து தனிப்பட்ட வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொழிற் சங்ககங்களுடன் கலந்துரையாடலும் நடைபெற்றிருந்தன. எவ்வாறாயினும், சம்பந்தமாக எவ்வித ஒருமித்த தீர்வும் அடையப்படவில்லை இது ஊழியர்களிற்கே திரும்பவும் சேர்களிறது. 2018-01-04 இல் கைச்சாத்திடப்பட்ட சேகரிப்பு உடன்படிக்கை 2018-04-23 ஆந் திகதி 2068/5 ஆம் இலக்க அதிவிசெட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. உடன்பட்ட வேதனங்களை மாற்றுவதற்கு சேகரிப்பு உடன்படிக்கையை மீறல் இது தற்போது காணப்படுவதுடன் மேலும் சட்ட வரையறைகளை உருவாக்க வேண்டும். | |
| (ஆ) | 134(3) ஆம் இலக்க நிதிப்பிரமாணம் மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு | செயற்திட்ட பதவியணிக்குள் உள்ளக கணக்காய்வளர் ஒருவரை சேர்க்கப்பட்டோ அல்லது மீளாய்வாண்டின் போது இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு செயற் திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உட்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப் படுகின்றதுடன் அவர்கள் இலங்கை மின்சார சபை முழுவதும் சாதாரண அடிப்படையில் கணக்காய்வு செய்கின்றனர். | செயற்திட்டத்தின் வினைத்தின் மற்றும் ஆக்கபூர்வத்தை உறுதிப் படுத்துவதற்கு செயற்திட்டம் உள்ளக கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 1/2006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 4.3 | ஏற்பாடுகளிற்கு முரணாக, 2020 திசெம்பர் 31 வரை ரூபா 24,813,513 கூட்டுத் தொகையான விடுமுறை | இது இலங்கை மின்சார சபையினுடைய கொள்கைக்கு அமைவாக உள்ளதுடன் சகல இலங்கை மின்சார சபையினுடைய | பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காசாக்குதல் மற்றும் மிகையூதியம் என்பன செயற்திட்ட பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கும் வழிகாட்டல்கள் வழமையாக இருந்தது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| **கூறு** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|
| | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்** | **அடையப்பட்ட செயலாற்றல்** | |
| | **சதவீதம்** | **சதவீதம்** | |
| மாலிபொட<br>- உப மின்நிலையம் | 100 | 100 | - |
| - பரிமாற்ற வழி | 100 | 100 | |
| றாகல<br>- உப மின்நிலையம் | 95 | 93 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| - பரிமாற்ற வழி | 95 | 93 | |
| நாவலப்பிட்டிய<br>- உப மின்நிலையம் | 95 | 93 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| - பரிமாற்ற வழி | 95 | 98 | |
| வெவல்வத்த | 100 | 100 | - |

| | | |
|---|---|---|
| - உப மின்நிலையம் - பரிமாற்ற வழி | 100 | 100 |

**முகாமைத்துவத்தின் பதில்** பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**கணக்காய்வாளருடைய சிபர்சுகள்** நடவடிக்கைகளை சபையின் திட்டத்தை செயற்படுத்தும் நேரத்தில் செய்யப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் கணக்காளர் பொன்ற பிரதான பதவிகள் முறையே 2020 ஒக்தோபரிலிருந்தும் 2019 சனவரியிலிருந்தும் பதில்கடமை அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை முறைப்படி அமுலாக்குவதற்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர்களை பிரதான பதவிகளில் நிரப்பப்பட வேண்டும். |

### 3.3 வேலைத்தள வருகைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது 2019 ஒக்தோபர் 30 இல் தொழில்நுட்ப ரீதியாக பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் றாகல உப மின்நிலையம் மின்வலுப்பட்டிருந்ததுடன் 2021 மே 20 இல் தேசிய மின்நிலைய முறைமைக்கு இணைக்கப்பட்டிருந்தது மற்றும் நாவலப்பிட்டிய உப மின்நிலையம் ஒரு ஆண்டும் 3 மாதங்கள் தாமதத்துடன் 2021 பெப்ரவரி 07 இல் செயற்படுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை சபையின் திட்டத்தை செயற்படுத்தும் நெரத்தில் செய்யப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டமானது இறுதிக் கட்டத்தில் உள்ள ஈபாதிலும் 6.0032 ஹெட்டயர் தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு உப மின்நிலையங்கள் உரிய பகுதிகளின் பிரதேச செயலகங்களால் சுவீகரிக்க வேண்டியிருந்ததுடன் பின்னர் சபைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது. | மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய மற்றும் றாகல உப மின்நிலையங்களிற்காக தெரிவுசெய்யப்பட்ட காணிகள் உரிய பிரதேச செயலகங்களால் இலங்கை மின்சார சபைக்கு குத்தகைக்கு விடப்படும். உப மின்நிலையங்கள் நிர்மாணிப்பதற்கு பிரதேச செயலாளரின் எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபை காணிச் சுவீகரிப்பு நடைமுறைகளின் பூர்த்தியாக்கலில் பிரதேச செயலகங்களால் வேண்டுகை செய்யப்படும் போது குத்தகை செலுத்தப்படும். | செயற்திட்டம் பூர்த்தியாக்குவதற்கு முன்னர் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கு அசவியமான நடவடிக்கைகள் எடக்க வேண்டும். |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| இலங்கை மின்சார சபையால் ஒப்பந்த விலைப் பட்டியல் மற்றும் சுங்கத் தீர்வை செலுத்தப்பட்ட வாகனங்கள் இலங்கை மின்சார சபையின் பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளருடைய பொக்குவரத்திற்காக ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட வாகனங்கள் செயற்திட்டம் பூர்த்தியாக்கிய பின்னர் இலங்கை மின்சார சபையின் கீழ் பதிவுசெய்யப்படும். | இலங்கை மின்சார சபையால் ஒப்பந்த விலைப் பட்டியல் மற்றும் சுங்கத் தீர்வை செலுத்தப்பட்ட வாகனங்கள் இலங்கை மின்சார சபையின் பெயரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். |